# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 375/2013

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 06.08.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சின்னுசாமி Father's Name : பழனி

துவக்க நேரம்: 1.23 . P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனக்கு ஆதார் அட்டை, ரேசன் கார்டு ,வாக்காளர் அடையாள அட்டை,மற்றும் சமையல் எரிவாயு இணைப்பு ஆகியவைகள் எனது பெயரில் உள்ளதா என்றால் உள்ளது ஆனால் தாவா சொத்தில் உள்ள கிராமத்தில் இல்லை வேறு ஒரு ஊரில் உள்ளது. மேற்கண்ட ஆவணங்கள் எனக்கு ராசிபுரம் வட்டம் நாரைகிணறு கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல கடம்பூர் கிராமத்தில் உள்ளது. மேற்கண்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் அரசங்காத்தில் முதியோர் ஓய்வு ஊதியம் பெற்று வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி ஓய்வு ஊதியத்தை எந்த கிராமத்தில் பெற்று வருகிறேன் என்றால் நாரைகிணறு கிராமத்தில் பெற்று வருகிறேன்.

2) எனது முதல் விசாரணை நிரூபண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசம் சரியானதா என்றால் க.எண் 8/245 என்பது தான் சரியானது. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் கூறியுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் தாவா சொத்தில் தாங்கள் குடியிருந்து வருவதாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான் ஆனால் தாவா சொத்தில்

நான்தான் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து தொடர்பான வீட்டு வரி ரசீது தவிர வேறு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டவில்லை என்றால் மின் அட்டையும், ரசீதுகளும் தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட இரு ஆவணங்களும் தாவா சொத்தின் சுவாதீனத்திற்கு உண்டான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகளின் வேண்டுகோள்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 1.43 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur

Typed by Selvi. S. Reshma - O.S. No. 375/2013 , Dt 06.08.2026.